[2013 மே 6

408—

கல்வித் தரத்தை மேம்படுத்துதல்

***180—டாக்டர் க. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலைநாடுகளுக்கு இணையாக தமிழகத்தில் தொடக்கக் கல்வி மற்றும் உயர் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் மருத்துவர் க. கிருஷ்ணசாமி அவர்கள் மேல்நாடுகளுக்கு இணையாக தமிழகத்தில் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு செயற்குறிப்பு உள்ளதா என்று ஒரு கேள்வியை எழுப்பியிருக்கின்றார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக உயர்ந்த நோக்கத்தோடு எடுத்திருக்கின்ற செயல் திட்டங்களையெல்லாம் அவர் பார்க்கத் தவறிவிட்டார் என்றே எண்ணத் தோன்றுகிறது.

தமிழகத்தினுடைய தலைசிறந்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, கல்வியின் தரம் உயர்ந்த நிலையிலே இருக்கின்றது. உதாரணமாகக் குறிப்பிட வேண்டுமென்று சொன்னால் முப்பருவ முறை. புத்தகச் சுமைகளைக் குறைக்க வேண்டும் என்பதற்காக முப்பருவ முறை கொண்டுவரப்பட்டது தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) 'புத்தகங்களே, புத்தகங்களே, குழந்தைகளைக் கிழித்துவிடாதீர்கள்' என்று ஒரு கவிஞன் அழகாகச் சொன்னான். 'பிறைநிலாவே வருந்தாதே, உனக்குள்ளேதான் பூரணச் சந்திரன் புதைந்திருக்கின்றான்' என்று அல்லாமா இக்பால் என்ற உருதுக் கவிஞன் சொன்னான். அதனுடைய அடிப்படையிலே முப்பருவ முறையையும் நம்மவர்கள் அமல்படுத்தியிருக்கிறார்கள்–trimester.

2013 மே 6]

Semester என்று சொன்னால் இரண்டு பருவங்கள், Trimester என்று முப்பருவ முறையைக் கொண்டு வந்து, புத்தகச் சுமையைக் குறைத்திருக்கின்றார் மாண்புமிகு அம்மா அவர்கள். அவற்றோடு மாத்திரம் அல்லாமல், மாணவர்களுடைய கல்வித் தரத்தை உயர்த்துதல், தொடர் மற்றும் முழுமையான கூட்டு மதிப்பீடு (CCE), ஆசிரியர்களின் கற்பிக்கும் திறனை மேம்படுத்துதல், எளிய செயல்வழி கற்றல் முறை, Simplified Activity Based Learning (SABL), படைப்பாற்றல் கல்வி (Activity Learning Methodology). முப்பருவ முறை (Trimester System) — புத்தகச் சுமையைக் குறைக்கும் அவற்றோடு மட்டுமல்லாமல் அறிவியல் கல்வியை மேம்படுத்துதல், நடமாடும் நூலகம் இவற்றையெல்லாம் அமைத்து கல்வியினுடைய தரத்தை உயர்த்தி இந்தியாவிலேயே தமிழகம் தலைசிறந்த மாநிலமாகத் திகழ்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் குறிப்பிட விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டினுடைய குடிமக்கள் உயர வேண்டுமென்றால், ‘வரப்புயர வேண்டும்’ என்று ஒரே வரியிலே ஔவையார் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதனுடைய பொருள், ‘வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும், குடி உயர கோன் உயரும்’ என்று ஒன்றினுடைய தொடக்கமாக அவர்கள் சொன்னார்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள் டாக்டர்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டினுடைய எதிர்காலம் வலுவாக இருக்க வேண்டுமென்று சொன்னால், கல்வியிலே அந்த நாடு சிறந்ததாக இருக்க வேண்டும். கல்வி என்று வருகின்றபோது அடிப்படைக் கல்வியும், உயர் கல்வியும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதையெல்லாம் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திலே பேசலாம். இப்போது நீங்கள் கேள்வியைக் கேளுங்கள். கேட்ட மூலக் கேள்வியையொட்டி துணைக் கேள்வியைக் கேளுங்கள்.

[2013 மே 6

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பக் கல்வி வலுவாக பள்ளிகளில் இருக்க வேண்டுமென்று சொன்னால், அந்த ஆரம்பக் கல்வியைப் புகட்டக்கூடிய இடங்களில் உட்கட்டமைப்பு வசதிகள், குறிப்பாக அந்தப் பள்ளியில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு உண்டான காற்று வசதியுள்ள வகுப்பறைகள், விளையாட்டு மைதானம், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி போன்ற அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் அனைத்து அரசாங்கப் பள்ளிகளிலும், தனியார் பள்ளிகளிலும் இருந்திடல் வேண்டும். எனவே, அந்த உட்கட்டமைப்பு வசதிகளை மேலைநாடுகளுக்குச் சமமாக உருவாக்குவதற்கு உண்டான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில பேருக்குச் சந்தை இருக்கும், ஆனால் சரக்கு இருக்காது. சில பேருக்குச் சரக்கு இருக்கும், ஆனால் சந்தை இருக்காது. சில பேரிடத்தில் இரண்டுமே இருக்கும், சந்தையும் இருக்கும், சரக்கும் இருக்கும், ஆனால் உண்மை இருக்காது. சந்தையும் இருந்து, சரக்கும் இருந்து உண்மையும் இருக்கின்ற ஒரே தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: அவற்றோடு மாத்திரமல்லாமல் உண்மையும், செம்மையும், செழுமையும், திண்மையும் படைத்தவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய கடந்த இரண்டாண்டு கால ஆட்சிக் காலத்தில் நிதிநிலை அறிக்கையிலே, வரவு–செலவுத் திட்டத்திலே, ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதி ஒதுக்கீட்டில் 25% ஒதுக்கீட்டை பள்ளிக் கல்வித் துறைக்கே தந்திருக்கிறார்கள் என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) அது இந்தத் துறையின் மேம்பாட்டுக்காகத்தான்.

2013 மே 6]

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் +2 படிக்கக்கூடிய மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி தருகிறோம் என்று அறிவித்தார்கள். ஒரு மிகப் பெரிய மாநிலத்தினுடைய கட்சித் தலைவர், இங்கு அறிவிக்கப்பட்டிருக்கின்ற இந்தத் திட்டத்தை தனது தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கிறார். இந்தியாவின் பிரதமர்களை உற்பத்தி செய்கின்ற மாநிலம் என்று அரசியல் கருத்தாளர்களால் கருதப்படுகின்ற உத்தரப் பிரதேச மாநிலத்தின் முதலமைச்சர், இளம் முதலமைச்சர், திரு. அகிலேஷ் யாதவ் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்த இலவச மடிக்கணினி வழங்கும் திட்டத்தினைச் சொல்லித்தான் நாங்கள் வெற்றி பெற்றிருக்கிறோம் என்று பத்திரிகையாளர்கள் கூட்டத்திலே சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களுடைய திட்டத்தை இப்போது கர்நாடகா மாநிலத்தில்கூட தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். இப்படி ஒரு திட்டத்தைச் சொல்லி ஒருவர் முதலமைச்சர் ஆக முடியும் என்றால், அம்மாவின் ஒட்டுமொத்த திட்டத்தையும் சொன்னால், அம்மா ஏன் இந்தியாவின் பிரதமராக வரக்கூடாது என்கிற கேள்வி இந்த நாடு முழுவதும் எழுந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு மருத்துவர், மூத்த உறுப்பினர், அவருக்குத் தெரியாதது ஒன்றும் அல்ல. இருந்தாலும் நான் பணிவோடு ஒன்றை அவருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தியாவில் ஒரு மாநிலத்தில் ஓரே நாளில், அதாவது, 20,920 ஆசிரியர்களை ஒட்டுமொத்தமாக அழைத்து உட்காரவைத்து, அவர்களுக்குப் பணி நியமனம் தந்திருக்கின்ற ஓரே அரசு (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய தமிழக அரசு; அதைத் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கட்டுமான அமைப்புகளை உயர்த்த வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். கடந்த ஆண்டில் மட்டும் எத்தகைய உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன என்பதை அவருக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். 61 நடுநிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. 4,261 கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. 3,404 கழிப்பறைகள், 7,262 மாணவிகளுக்குக் கழிப்பறைகள், 3,356 பள்ளிகளுக்கு குடிநீர் வசதிகள், 2,675

பள்ளிகளுக்குச் சுற்றுச் சுவர் வசதிகள், 2,171 நடுநிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்கான இருக்கை வசதிகள், இத்தனையும் ஏற்படுத்தித் தந்துகொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே அரசு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல்லரசுதான் என்பதைப் பணிவோடு குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தியாவின் அரசியல் தலைநகரம்–Political Capital—டெல்லியாக இருந்தாலும்கூட, இந்தியாவின் கல்வியின் தலைநகரமாக மாறக்கூடிய வல்லமை தமிழ்நாட்டிற்கு உள்ளது, (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய தகுதி வளர்ந்துகொண்டே இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இன்னும் அடிப்படைக் கல்வியைப் பெறுவதில் குறைந்தபட்சம் 5 ஆம் வகுப்பு வரையிலாவது அனைத்துக் குழந்தைகளும் இலவசமாகக் கல்வி பெறுகின்றவகையில், அதாவது தனியார் பள்ளிகளே இல்லாமல் அனைத்து வசதிகளையும் ஆங்கிலவழிக் கல்வி உட்பட, அரசுப் பள்ளிகளிலேயே ஏற்படுத்தி, எதிர்காலத்தில் உயர் கல்வி உட்பட அனைத்துக் கல்வியையும் இலவசமாகப் பெறுகின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா? ஏனென்று சொன்னால் இப்பொழுது தமிழகத்தில் பெரும்பாலான குழந்தைகள் தனியார் பள்ளிகளுக்குச் சென்று அதிகமாகச் செலவழிக்கவேண்டிய நிலை இருக்கிறது. அதற்குண்டான ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும், மீண்டும் பழமையை நோக்கியே சிந்தித்துக்கொண்டிருக்கிறார். அவர் தன்னுடைய இயக்கத்திற்குப் புதிது என்று பெயர் வைத்தால் மாத்திரம் போதாது, சிந்தனையும் புதிதாக இருக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) செயல்பாடுகளும் புதிதாக இருக்க

2013 மே 6]

வேண்டும், எண்ணமும் புதிதாக இருக்க வேண்டும். அப்படி எண்ணமும், செயலும், செயல்பாடும் புதிதாக இருந்தால்தான், புதிதாக ஒரு எண்ணத்தை உருவாக்க முடியும். புதிதாக எண்ணத்தை உருவாக்கக்கூடிய ஆற்றலும், வல்லமையும், நுட்பமும், திட்பமும் கொண்டவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று உலகத் தரத்திற்கு இணையான ஒரு கல்வியைத் தரக்கூடிய அரசாக தமிழக அரசு இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் மருத்துவர் அவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

Smart Card system, வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. இந்த மாநிலத்தில்தான் ஏற்படுத்தப்பட்டு மாணவர்களின் இடைநிற்றல், தேர்ச்சி மற்றும் நலத் திட்டங்கள் முறையாகச் சென்றடையக்கூடிய தகவல்களைச் சேகரிப்பதற்கு Smart Card திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11–05

அதையடுத்து, புவியியல் வரைபடத் தகவல் முகமை (Geo Graphical Information System) என்ற புதிய முறை அரசின் சாதனை முயற்சியாகவே திகழ்ந்துகொண்டிருக்கிறது. இவற்றின்மூலம் ஒவ்வொரு வருவாய் மாவட்டம், கல்வி மாவட்டம், அத்தனை பள்ளிகளின் இருப்பு, குடியிருப்புகளின் எண்ணிக்கைக்கேற்ப, பள்ளிகளின் தேவை போன்றவற்றை எளிதில் அளவிட முடியும். இது உலக அளவில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்ந்துகொண்டிருப்பதற்கான எடுத்துக்காட்டுகள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் ஆரம்பக் கல்வியாகட்டும் மற்றும் இருக்கிற தொடக்கக் கல்விக்கு மேற்பட்டு, உயர்நிலைக் கல்வி அல்லது மேல்நிலைக் கல்விகளாகட்டும், இன்று தரம் உயர்ந்திருக்கக்கூடிய தமிழகம், தலைசிறந்த மாநிலமாக கல்வியில் ஒரு மறுமலர்ச்சி கொண்டிருக்கிற ஒரு மாநிலமாகத் திகழ்ந்துகொண்டிருக்கிறதென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 409, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.